**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC.37/2021 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-3/PW- 3 | Village: | |
| Name | : வேம்பு | Age | :70 |
| Father's/Husband's Name | : ராமமூர்த்தி | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 09.10.2024**

சாட்சியை திருநீலக்குடி காவலர் திருமதி. அனிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

**முதல் விசாரணை**

நான் பனங்காட்டாங்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் வீட்டுகுடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார்கள். அசா1 லதா எனது மருமகள் ஆவார். அசா2 எனது மகன் ஆவார். சுமார் 5 வருடத்திற்கு முன்பு ஒருநாள் இரவு சுமார் 9 மணியளவில் நான் எனது வீட்டிலிருந்தபோது எதிரிகளின் கன்றுகுட்டி எனது கொல்லையில் வந்து மேய்ந்தது. அதனை எனது மருமகள் பிடித்து கட்டி வைத்தார். அதனால் எதிரிகளுக்கும் எனது மருமகளுக்கும் சண்டை ஏற்பட்டது. எதிரி நடராஜன் எனது மருமகளின் உதட்டில் கடித்து

விட்டார். எனது மருமகளுக்கு ஏற்பட்ட காயத்திற்காக அவரை கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜரில் இருந்தனர். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2024.10.10 10:27:45 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.37/2021 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-2/PW- 2 <br> Name : சாமிநாதன் <br> Father's/Husband's Name : ராமமூர்த்தி <br> Nationality : Indian | Village: <br> Age :52 <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 09.10.2024**

சாட்சியை திருநீலக்குடி காவலர் திருமதி. அனிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

முதல் விசாரணை

நான் பனங்காட்டாங்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அசா1 லதா எனது மனைவி ஆவார். கடந்த 06.07.2019 ம் தேதி இரவு சுமார் 9 மணியளவில் நான் எனது மனைவியை மருத்துவ மனையிலிருந்து வீட்டிற்கு அழைத்து வந்தேன். அப்போது எங்கள் வீட்டிற்கு பின்னால் உள்ள கொல்லையில் எதிரிகளின் கன்றுகுட்டி மேய்ந்து கொண்டிருந்தது. அதனால் அந்த கன்றுகுட்டியை பிடித்து எங்கள் வீட்டிற்கு முன்னால்

உள்ள மின் கம்பத்தில் கட்டினேன். அப்போது எதிரி நடராஜன் அங்கு வந்து என்னை பார்த்து குச்சிக்காரி மகனே, தேவடியா மகனே யாருடா மாட்டை கட்டியது என்று திட்டினார். அவருடன் அவரது மனைவி ரேவதி வந்தார். எனக்கும் எதிரி நடராஜனுக்கும் சண்டையாகிவிட்டது. எதிரி நடராஜன் என்னை பிடித்து கீழே தள்ளிவிட்டார். அதைஎனது மனைவி லதா தடுக்க வந்தபோது எதிரி நடராஜன் எனது மனைவியின் உதட்டை கடித்து துப்பி விட்டார். எனது மனைவிக்கு ஏற்பட்ட காயத்தால் அவருக்கு ரத்தம் வந்ததால் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் வந்து விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜரில் இருந்தனர். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2024.10.10 10:28:00 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC.37/2021 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW-1/PW-1 | Village: |
| Name : லதா | Age :47 |
| Father's/Husband's Name : சாமிநாதன் | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 09.10.2024**

சாட்சியை திருநீலக்குடி காவலர் திருமதி. அனிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

சாட்சியின் முதல் விசாரணை 02.11.2022 ம் தேதி பதிவு செய்யப்பட்டு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 319 ன் கீழான மனு தள்ளுபடி செய்யப்பட்டதால் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் ஆஜரில் இருந்தனர். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2024.10.10 10:28:12 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**